

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார், பொதுசுகாதார குழுத்தலைவர் கவிதா நேதாஜி கண்ணன், பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், டூ வின் கருணாநிதி உள்பட பலர் பங்கேற்றனர்.

### புதுக்கோட்டை தொகுதி கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் கருப்பட்டி ஊராட்சி

# ஆயிபட்டியில் உள்ள கூத்தாயி அம்மன் திருக்கோவிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?.

## சட்டப் பேரவையில் டாக்டர் வை.முத்துராஜா கேள்வி!

சென்னை, ஏப். 8-

**இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** கூத்தாயி அம்மன் திருக்கோயில் என்பது 32 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றது. தற்பொழுது மண்டல குழு, மாநில குழு ஒப்புதல் பெறப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டு ppt தயார். வரைபடப் பணி பூர்த்தி செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வெகு விரைவில் ஒப்பந்தம் போடப்பட்டு பணிகள் துவக்கப்படும்.



**டாக்டர் வை.முத்துராஜா:** புதுக்கோட்டை மாவட்ட தேவஸ்தானத்திற்கு அரசு மானியம் கடந்த ஆட்சியில் ரூ. ஒரு கோடியாக இருந்ததை திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு மூன்று முறை மானிய உயர்வாக ரூ. எட்டு கோடியாக உயர்த்தி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சரவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட கருப்பட்டி ஊராட்சி ஆயபட்டியில் உள்ள அருள்மிகு கூத்தாயி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா நடைபெற அனுமதி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும், கிராம பொதுமக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் புதுக்கோட்டை மாநகராட்சி வார்டு எண் 7 அடப்பன் வயல் பகுதியில் அமைந்துள்ள அறநிலையத் துறை க்கு சொந்தமான மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு சிங்கமுத்து அய்யனார் திருக்கோயில் குடமுழுக்கு விழா நடத்த அரசு முன்வருமா? என்றும் புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் இருக்கின்ற கோயில்களின் எண்ணிக்கை எத்தனை?. அதற்கு அரசு அந்த திருக்கோயில்களில் நித்திய பூஜை நடத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பிகே. சேகர்பாபு:** அவர் கூறிய சிங்கமுத்து அய்யனார் திருக்கோவிலினுடைய பணிகள் நடைபெற்று க் கொண்டிருக்கின்றன. 24. 7. 2025 அன்று குடமுழுக்கு தேதி நிர்ண யிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே குடமுழுக்கு அன்றைய தினம் நடைபெறும். புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோவி லுக்கு 225 திருக்கோயில்கள் இருக்கின்றன. ஆண்டு வருமானம் மொத்தம் 3 கோடியே 14 லட்சம் ரூபாய். ஆனால் இந்த திருக்கோயி லில் 4 திருக்கோயில்களை தவிர்த்து உண்டியல் வருமானம் கூட இல்லை. 225 திருக்கோவிலுக்கு 63 உண்டியல்கள் தான் மொத்தமே வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இக்கட்டான சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் மானியம் என இருந்ததை படிப்படியாக உயர்த்தி இன்றைக்கு ஆண்டிற்கு 19 கோடி ரூபாய் அளவிற்கு மானியத்தை உயர்த்தி தந்து, திருக்கோவில் இருள் அகல, ஒலி வீசச் செய்தவர் தமிழக முதல்வர் திராவிட மாடல் நாயகன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டும் கூடுதலாக மானியத்தை கேட்டிருக்கின்றோம். 536 பணியாளர்கள் இருக்கின்றார்கள். பணியாளர்களுடைய சம்பளம் கூட ரூ. 500 1000 என்று இருந்ததை 19 கோடி அரசு மானியத்தை உயர்த்தியதால் இன்றைக்கு சம்பளம் ரூ.10,000 வரையில் வருகின்ற ஒரு நல்ல சூழல் ஏற்பட்டிருக்கின்றது. தொடர்ந்து அனைத்து திருக்கோயில்களும் சிறந்த முறையில் பராமரிக்க இந்த ஆண்டும், முதல்வர் அவகள் மானியத்தை உயர்த்தி தருவதாக கூறி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் வை.முத்து ராஜா:** புதுக்கோட்டை விட்டோபா பெருமாள் திருக்கோயில் திருமண்டபம் கட்டுவதற்கு ரூபாய் ஆறரைக் கோடி நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்திற்கு உட்பட்ட திருமணஞ்சேரி ஊராட்சியில் உள்ள ஸ்ரீ பெரியநாயகி அம்பாளுடன் பரிம லேஸ்வரர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. இக்கோயிலின் சிறப்பம்சங்கள் திருமண மாகாத ஆண்கள் மற்றும் பெண்கள் இந்த ஆலயத்தில் தரிசனம் செய்தால் விரைவில் திருமணம் ஆகும் என்பது ஐதீகம். அத்திருக்கோயிலுக்கு பிற மாவட்டங்களில் இருந்தும் அண்டை மாநிலங்களில் இருந்தும் தினசரி 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் வந்து செல்கின்றனர். மேலும் திருக்கோயிலில் சுப முகூர்த்த நாட்களில் மட்டும் மாதந்தோறும் 20 முதல் 25 திருமணங்கள் நடைபெறுகின்றன. கோவிலுக்கு சொந்தமான இடம் உள்ளதால் அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து ஒரு புதிய திருமண மண்டபத்தை கட்டி தருவதற்கும் இக்கோயிலுக்கு சொந்தமான குளத்தை சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அரசு முன்வருமா என்பதை தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.


**அமைச்சர் பிகே.சேகர்பாபு:** அருள்மிகு பரிமளேஸ்வரர் திருக்கோயிலானது திருமண பரிகார ஸ்தலம் ஆகும். ஒவ்வொரு முகூர்த்தத்திற்கும் குறைந்தது 10 முதல் 15 திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை கருத்தில் கொண்டு தான் பக்கத்தில் இருக்கின்ற மற்றொரு திருக்கோயிலான விட்டோபாதிருக்கோயிலில் 6.7 கோடி ரூபாய் செலவில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திரு கோவிலுக்கு சொந்தமான நிலமும் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் மேலான அனுமதியுடன் வருகிற மானிய கோரிக்கையில் அந்த பகுதியிலும் உறுப்பினர் கோரிய அந்த திருமண பரிகார தளத்திலும் திருமண மண்டபம் கட்டுவதற்கு அறிவிப்பு வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இசைமுரசு நாகூர் அனிபா

### ஏப்ரல் 8 (2015)



தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் தமது காந்தர்வ இசையால் – 'கணீர்' குரலால் – "அழைக்கின்றார்... அழைக்கின்றார்... அண்ணா", "ஓடி வருகிறான்.. உதயசூரியன்", "கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!" போன்ற கருத்தாழமிகு பாடல்களால் கழகக் கொள்கைகளைப் பரப்பி வந்த தூய தொண்டர்.

1952–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நடத்திய கழகத்தின் முதல் மாநாடு தொடங்கி, அனைத்து மாநாடுகளிலும் இயக்கப் பாடல்களை பாடியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற உயிரனைய தோழர்.

'இசைமுரசு' எனும் அடைமொழியால், அகிலத்தவரால் அன்பு தவழ அழைக்கப்பட்டவர்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

முரசொலி அறக்கட்டளை சார்பில் 2011ஆம் ஆண்டுக்கான "கலைஞர் விருதும்", ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டார்.

"தன்னுடைய பாடல்கள் மூலம் கழகத் தொண்டாற்றிய இசைமுரசு அனிபா மறைந்தாரே, அவர் புகழ் ஓங்குக!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சென்னை வடக்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 08.04.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | தருமபுரி மேற்கு | என்.என்.மஹால், சேலம் புறவழிச் சாலை, அரூர், தருமபுரி. |
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 09.04.2025 புதன்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடக்கு | அறிவகம் திருமண மாளிகை, இராயபுரம். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |
| 10.04.2025 வியாழக்கிழமை | மாலை 4.00 மணி | ஈரோடு வடக்கு | இராமாயம்மாள் திருமண மண்டபம், கோபிச்செட்டிபாளையம். |
| 12.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கழக அலுவலகம், வாழப்பாடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 06-04-2025



### சேலம் கிழக்கு மாவட்டத்தில்

# கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், ஏப். 8-

சேலம் கிழக்கு மாவட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் ஏப்.12 அன்று நடைபெறுகிறதென்று மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டது. அவர்களின் அறிமுக கூட்டம் வருகின்ற 12.04.2025 அன்று காலை 10 மணிக்கு வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகமான முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய எனது தலைமையிலும், சேலம் மண்டல இளைஞரணி பொறுப்பாளரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான சீனிவாசன் மற்றும் சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீரபாண்டி.ஆ.பிரபு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் மற்றும் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# 44 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி



தோற்றம் – 5.6.1921
மறைவு : 8.4.1981

## மிசா இரா.அருணாசலம்

### புதுக்கோட்டை

**அன்புத் தந்தையே!**
தாங்கள் வாழ்ந்த காலம் முழுவதும்
தலைவர் கலைஞர் வழியில்
வழுவாது தொடர்ந்த உங்கள் பயணத்தை
தங்கள் நினைவோடு,
தனயன் நான் தொடர்கின்றேன்;
**கழகத் தலைவர் தளபதி தலைமையில்!**

தங்கள் நினைவில் வாழும்
**அரு.வீரமணி எம்.ஏ,**
அவைத் தலைவர் –
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.
தலைவர் கலைஞர் தமிழ்ச்சங்கம்,